சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு

சபரகமுவ மாகாண சபையின் அரச சேவை ஆணைக்குழுவின் மோட்டார் வாகன சாரதிகளுக்கான இணைந்த சாரதிகள் சேவையின் தரம் III திறந்த ஆட்சேர்ப்பு

1.0 சபரகமுவ மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் 30.05.2013 ஆம் திகதியில் முதல் அங்கீகரிக்கப்பட்ட சபரகமுவ மாகாண மோட்டார் வாகன சாரதிகளுக்கான இணைந்த சாரதிகள் சேவையின் விதிகளுக்கு இணங்க **இணைந்த சாரதி சேவை தரம் III பதவிக்கான** ஆட்சேர்ப்பிற்கு தொழிற்சார் பரீட்சைக்கான தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இங்கு ஆண் விண்ணப்பதாரிகள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். நிரப்பப்பட வேண்டிய **வெற்றிடங்களின் எண்ணிக்கை 33** ஆகும்.

2.0 இப் பதவிக்கு உரிய தகுதிகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் வாகனம் ஓட்டுவது தொடர்பான தொழிற் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள். அதில் அதிக மதிப்பெண் பெறும் விண்ணப்பதாரர்களுக்காக இடம்பெறும் பொது நேர்காணலில் தகுதிகள் பரீட்சிக்கப்பட்டு அதில் தகுதி பெற்ற விண்ணப்பதாரிகள் அரச நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய 15/90 ஏற்பாட்டிற்கு அமைய மாவட்ட மக்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ப இரண்டு மாவட்டங்களிலும் தேர்ச்சி பெற்றவர்களின் தகுதிக்கு ஏற்ப சபரகமுவ மாகாண அரச சேவையில் இணைந்த சாரதிகள் சேவை தரம் III பதவிக்கு நியமனம் செய்வதற்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.இந்த தொழில் முறைத் தேர்வானது சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட பரீட்சைக் குழுவினால் நடத்தப்படுவதுடன் , நடைபெறும் திகதி உரிய நேரத்தில் அறிவிக்கப்படும்.

குறிப்பு – இந்த விளம்பரத்தில் கோரப்பட்டுள்ள அனைத்துத் தகுதிகளும் பொது நேர்காணலில் பரீட்சிக்கப்படும் .அதற்கு மேலதிக மதிப்பெண்கள் வழங்கப்பட மாட்டாது. தேவையான தகுதிகள் பூர்த்தி செய்யப்படவில்லை என கண்டறியப்பட்டால் , இந்த பதவிக்கான கோரிக்கை இரத்து செய்யப்படும்.

3.0 விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும் இறுதி திகதி 30.11.2026 ஆகும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் 30.11.2026 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதவிக்கு தேவையான அனைத்துத் தகுதிகளையும் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமாகும்.

4.0 சம்பளம் : இலக்கம் 10/2025 மற்றும் 25.03.2025 ஆம் திகதி அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய **இணைந்த சாரதிகள் சேவை தரம் III** சம்பள வகுதி PL 3 **-2025** மற்றும் மாதாந்த சம்பள அளவு **ரூ.42,780-10x490-10x540-10x590-12x630- ரூ.66,540/- ஆகும்.**

5.0 இப்பதவி நிரந்தரமானது.ஓய்வூதியத்துடன் கூடியது.ஓய்வூதிய முறைப்பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.

6.0 **ஆட்சேர்ப்பதற்கான தகுதிகள் :- சபரகமுவ மாகாண அரச சேவையில் மோட்டார் வாகன சாரதிகளுக்கான இணைந்த சாரதிகள் சேவையின் தரம் III பதவிக்கான ஆட்சேர்ப்பு** செய்வதற்கு பின்வரும் தகுதிகள் பொருந்தும்.

6.1 கல்வித் தகைமைகள் :- கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு குறைந்தபட்சம் சிங்களம்/தமிழ் மொழி சித்தியுடன் உள்ளடங்களாக ஆறு பாடங்களில் இரு திறமை சித்திகளுடன் சித்தியடைந்திருக்க வேண்டும்.

6.2 தொழிற் தகைமைகள் :- 24 டன்களுக்கும் குறைவான மொத்த வாகன எடை கொண்ட தனியார் / டாக்சி வாகனங்கள் மற்றும் ஸ்டேஷன் வேன்களை ஓட்டுவதற்காக , மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட தொழில்முறைத் தகுதிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் 30.11.2026 ற்கு முன்னர் 03 ஆண்டுகளுக்கு முன் குறைந்த பட்சம் சீ மற்றும் சீ1 வாகன வகுப்பிற்கான செல்லுபடியாகும் வாகன அனுமதிப் பத்திரம் அல்லது புதிய சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு அமைய பீ வகுப்பு அனுமதிப் பத்திரத்தினை பெற்றிருக்க வேண்டும்.

6.3 அனுபவம் :- வாகன சாரதியாக சாரதி அனுமதிப் பத்திரத்தினை பெற்ற திகதிக்கு பின்னர் மூன்று வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். (அனுபவமானது சான்றிதழ்கள் மூலம் உறுதிபடுத்தப்படுதல் வேண்டும்) நெடுஞ்சாலைகள் விதிகள் குறித்த நல்ல அறிவு பெற்றிருக்க வேண்டும்.

6.4 உடல் தகுதிகள் :-

(I) . இரவும் பகலும் வேலை செய்வதற்கு உடல் தகுதியுடன் இருக்க வேண்டும் மற்றும் நல்ல கண்பார்வை பெற்றிருக்க வேண்டும் . நேர்காணலின் போது அரசாங்க மருத்துவ அதிகாரியால் வழங்கப்படும் முறையான வைத்திய சான்றிதழ் மூலம் இது நிரூபிக்கப்பட வேண்டும்

(II) . குறைந்தபட்சம் 5 அடி உயரம் இருக்க வேண்டும்.

6.5 வயது :-

30.11.2026 திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

7.0 வேறு தகைமைகள்

I. சபரகமுவ மாகாணத்தில் நிரந்தர வசிப்பிடத்துடன் கூடிய இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும்.

II. 30.11.2026 ஆம் திகதி விண்ணப்பதாரி சபரகமுவ மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளராக இருப்பதுடன் , விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்களுக்கு நிரந்திர வதிவிடமில்லை எனில் , விண்ணப்பதாரியின் துணைவர் 30.11.2026 விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்கள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல்.

III. விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தை கொண்டவராகவும் நல்ல உடல் நலத்துடன் இருத்தல் வேண்டும்.

குறிப்பு – ஏற்கனவே பொதுச் சேவையில் உள்ள நிரந்தர மற்றும் ஓய்வூதியம் பெறும் நியமனதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.

8.0 பரீட்சை கட்டணங்கள் :

பரீட்சைக் கட்டணம் ரூ.600/- ஆகும். சபரகமுவ மாகாண சபையின் எந்தவொரு அமைச்சு அலுவலகத்திற்கு / திணைக்களத்திற்கு (உள்ளூராட்சி நிறுவனம் தவிர) அல்லது சபரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திற்கும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் குறித்த கட்டத்தினுள் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். **இப் பரீட்சைக் கட்டணத்தை சபரகமுவ மாகாண சபையின் 20.03.02.99 என்ற வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்க வேண்டும்.**செலுத்தப்படுகின்ற பரீட்சைக் கட்டணம் எக் காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.அத்துடன் காசுக் கட்டளை மற்றும் முத்திரைகள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.பற்றுச் சீட்டின் நகல் பிரதியை வைத்திருப்பது பயனுடையதாகும்.

9.0 **விண்ணப்பப்படிவம் :**

9.1 A-4 அளவிலான கடதாசிகளை உபயோகித்து,

(அ). தொடரிலக்கம் 01 முதல் 04 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும்,

(ஆ). இல 05 முதல் இரண்டாம் பக்கத்திலும் அடங்குமாறு இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை தமது கையெழுத்தினாலே தெளிவாக நிரப்புதல் வேண்டும்.

(இ).விண்ணப்பப்படிவங்களை தயாரிக்கும் போது சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரினை குறிப்பிடுதல் வேண்டும்.

9.2 உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்திராத குறித்த திகதிக்கு முன்னர் பரீட்சை கட்டணங்களைச் செலுத்திடாத மற்றும் சரியாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய வகையில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் நட்டத்திற்குரிய பொறுப்பினை விண்ணப்பதாரிகளே ஏற்றல்

வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுடையதாக அமையும்.பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தினை ஒத்துள்ளதா என்பது தொடர்பாக விண்ணப்பதாரி கவனம் செலுத்துதல் வேண்டும்.அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படலாம்.

9.3 இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற ஊகத்தின் அடிப்படையில் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி உரிய திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் தொழில்முறை பரீட்சை தோற்றுவதற்கு சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் இடமளிக்கப்படும். தொழில்முறை பரீட்சை தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் , விண்ணப்பதாரி மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அல்லது இந்தப் பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக் கொள்வதாகவோ கருதப்படமாட்டாது

9.4 விண்ணப்பதாரியின் தொழில்முறை பரீட்சைக்காக கையொப்பம் விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் சான்றளிக்கப்பட வேண்டும். எந்தவொரு நிறுவனத்திலிருந்தும் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் அந்த நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியினால் தனது கையொப்பத்தை சான்றளிக்கலாம். அவ்வாறல்லாத விண்ணப்பதாரர் அரசாங்க பாடசாலையின் அதிபர் /ஓய்வுபெற்ற அதிகாரி/ பிரிவின் கிராம சேவக அதிகாரி/சமாதான நீதவான் /சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி / பிரசித்த நொதாரிசு / முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலர் / பொலிஸ் சேவை அலுவலர் / அரச அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தர பதவிநிலை அதிகாரி அல்லது பௌத்த விகாரையின் தலைமை விகாராதிபதி அல்லது தலைமை மதகுரு அவர்கள் அல்லது பிற மத வழிபாட்டுத் தலப் பொறுப்பான நபர் அல்லது மத சமூகத்தில் குறிப்பிடத்தக்க பதவியை வகிக்கும் நபர் ஆகியோரால் சான்றுபடுத்தப்பட வேண்டும்.

9.5 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் 30.11.2026 திகதி அல்லது அதற்கு முன்னர் **"செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு, சபரகமுவ மாகாண சபை, சபரகமுவ மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, புதிய நகரம் , இரத்தினபுரி** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

9.6 விண்ணப்பப்படிவத்தினைக் கொண்டிருக்கின்ற தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"சபரகமுவ மாகாண மோட்டார் வாகன சாரதிகளுக்கான இணைந்த சாரதிகள் சேவையின் III ஆம் தரத்தின் பதவிக்கு ஆட்சேர்ப்பு"** எனவும் மற்றும் நிரந்தர வதிவு மாவட்டத்தினையும் குறிப்பிட வேண்டும்.

10.0 தொழில்முறைத் தேர்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அறிவிப்பின்படி தேவையான தகைமைகளைக் கொண்டிருக்கவில்லை எனக் கண்டறியப்பட்டால் ,அவர்களின் விண்ணப்பங்கள் இரத்து செய்யப்படும் .மேலும் இந்த ஆட்சேர்ப்பு அறிவிப்பின்படி வெற்றிடங்கள் நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பான இறுதி தீர்மானம் இந்த ஆணைக்குழுவிற்குரியது.

11.0 **தவறான தகவல்களைச் சமர்ப்பித்தல்**

விண்ணப்பப் படிவத்தினை நிரப்பும் போது துல்லியமான தகவல்களை வழங்குவதில் மிகுந்த கவனம் செலுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் வழங்கிய ஏதேனும் தகவல் எந்த நேரத்திலாவது தவறானது எனக் கண்டறியப்பட்டால் , அவர் அரச சேவையில் இருந்து நீக்கப்படலாம்.

12.0 இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் கருத்து இருந்தால் , அது தொடர்பாக சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியானது.சகல விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது பரீட்சை சட்ட திட்டங்களுக்கு அமைய இணைக்கப்பட்டுள்ளீர்கள். **இங்குள்ள சிங்கள மற்றும் தமிழ் அறிவிப்புகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால் சிங்கள மொழிமூல அறிவிப்பிற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.**

28....10.2026
சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு
சபரகமுவ மாகாண கட்டிடத் தொகுதி
புதிய நகரம் இரத்தினபுரி

எஸ்.பீ.கே.போதிமான
செயலாளர்
சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு
சபரகமுவ மாகாணம்

S.P.K. Bodhimanna
Secretary
Provincial Public Service Commission
Sabaragamuwa Province

மாதிரி விண்ணப்பப்படிவம்

சபரகமுவ மாகாண சபையின் அரச சேவை ஆணைக்குழு

சபரகமுவ மாகாண சபையின் அரச சேவை ஆணைக்குழுவின் மோட்டார் வாகன சாரதிகளுக்கான

இணைந்த சாரதிகள் சேவையின் தரம் III ஆட்சேர்ப்பு செய்தல்

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

சிங்களம் – 1

தமிழ் – 2

ஆங்கிலம் - 3

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

1.0 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக எழுதி முதலெழுத்துக்களுடன் பெயர் : -
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உதாரணம்: (PERERA.A.B.C.)

.....

1.2 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) .....

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்).....

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம்

1.5 தொலைபேசி இலக்கம்

1.6 விண்ணப்பிக்கும் பதவி : .....

1.7 I. செல்லுபடியாகும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளதா? ஆம்/இல்லை

II. செல்லுபடியாகும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளதெனின் அதன் செல்லுபடியாகும் திகதி .....
(செல்லுபடியாகும் வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றினை இணைக்க)

2.0 2.1 நிரந்தர முகவரி: - .....
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.2 நிரந்தர முகவரி: - .....
(சிங்களம் / தமிழில்)

2.3 அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி : .....
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

3.0 3.1 விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவு மாவட்டம் : .....

3.2 பிரதேச செயலார் பிரிவு : .....

3.3 கிராம அதிகாரிப் பிரிவு : .....

3.4 வதிவுக்காலம் : .....

4.0

4.1 பிறந்த திகதி : -

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

4.2 30.11.2026 திகதிக்கு வயது:-

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

5.0 கல்வித் தகமை :

5.1 கா.பொ.த (சா.த) பரீட்சை தொடர்பான விபரம் (பரீட்சை திணைக்களத்தினால் வெளியிடப்படும் பெறுபேறுகளின் பிரதியொன்றினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்)

வருடம் : ..... சுட்டெண் : .....

தொடர் இல	பாடம்	பெறுபேறு	தொடர் இல	பாடம்	பெறுபேறு
01			06		
02			07		
03			08		
04			09		
05			10		

இரண்டாம் முறை(பொருத்தமானது எனின் சான்றிதழின் பிரதியனை இணைக்க)

I. பரீட்சை வருடம் மற்றும் மாதம் : .....

II. பரீட்சை சுட்டெண் : .....

III. பெறுபேறு :

தொடர் இல	பாடம்	பெறுபேறு	தொடர் இல	பாடம்	பெறுபேறு
01			06		
02			07		
03			08		
04			09		
05			10		

6.0 சேவை அனுபவம் :

சேவை செய்த நிறுவனங்கள்	சேவைக் காலம்

7.0 நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டிருக்கிறீர்களா?

ஆம் ☐ இல்லை ☐

8.0 ஏற்கனவே அரச சேவையில் இருப்பின் ,

8.1 திணைக்களம் / நிறுவனத்தின் முகவரி : .....

8.2 தற்போது வகிக்கும் பதவி : .....

8.3 சேவைக் காலம் : .....

8.4 நிரந்தர ஓய்வூதியதாரரா அல்லது தற்காலிக பதவி : .....

9.0 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு தொடர்பான விபரங்கள்

i) . பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் : .....

ii) . பற்றுச் சீட்டு இலக்கம் மற்றும் திகதி : .....

iii) .செலுத்திய தொகை: .....

பற்றுச்சீட்டை பிரித்தெடுக்க முடியாதவாறு இங்கு ஒட்டவும். (பற்றுச் சீட்டின் நிழற்பட பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக் கொள்ளவும்)

10.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை

(அ). இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கியுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என சான்றுப்படுத்துகின்றேன். இதன் எந்தவொரு பகுதியையும் பூரணப்படுத்தாமல் விடுதல் அல்லது தவறுதலாக பூர்த்தி செய்தாலோ ஏற்படக்கூடிய இழப்பை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.மேலும் இதன் அனைத்துப் பகுதிகளும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் நான் அறிவிக்கின்றேன்.

(ஆ). என்னால் செய்யப்பட்ட இந்த அறிவிப்பு பொய்யானது எனக் கண்டறியப்பட்டால் , நியமனத்திற்கு முன்பு தகுதியற்றவர் என்றும் நியமனம் கிடைத்த பின் பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்

(இ). இதில் வழங்கப்பட்டுள்ள எந்த தகவல்களும் நான் மாற்றம் செய்யமாட்டேன்.

(ஈ). சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு நான் கட்டுப்படுவேன் என்றும் அறிவிக்கின்றேன்.

....

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

11.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிபடுத்தல்

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி./செல்வி./ ..... என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ,அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ..... ஆந் திகதி வைத்தார் என்றும் சான்றுபடுத்துகின்றேன்.

....

திகதி உறுதிபடுத்தும் உத்தியோகத்தர் கையொப்பம்

உறுதிபடுத்தும் உத்தியோகத்தர் முழுப் பெயர் : .....

பதவி : .....

முகவரி : .....

(பதவி முத்திரையில் உறுதிப்படுத்தல்)

12.0 அரசாங்கத்தில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு கீழே வழங்கப்பட்டுள்ள சான்றிதழை நிறுவனத் தலைவர் , திணைக்கள தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரினால் வழங்கப்பட வேண்டும்.

(அ) இந்த திணைக்களத்தில் ..... திகதி முதல் ..... பதவி வகிக்கும் ..... அவர்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு பெற்றுக் கொள்ள வேண்டிய அனைத்து சம்பளப்படி உயர்வுகளையும் ஈட்டியுள்ளார் எனவும் , கண்டனங்களைத் தவிர வேறு எந்த ஒழுக்காற்று நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை மற்றும் உண்மையானவை என்றும் நான் சான்றளிக்கின்றேன்.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் விண்ணப்பதாரர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்கப்படலாம் / விடுவிக்க முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பெயர் : .....

பதவி : .....

திகதி : .....

திணைக்களம்/நிறுவனம் .....

(பதவி முத்திரையில் உறுதிப்படுத்தல்)

.....

திணைக்களத் தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியின் கையொப்பம்